சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A. 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு | யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஆடிமீ ௧௦ உ (1943 ஜூலைமீ 26 திங்கட்கிழமை) [இல. ௯௧

## விஸமகளிர் விடுதி வேண்டாம்

### சைவ பரிபாலன சபையில் தீர்மானம்

சென்ற 18-7-43 இல் கூடிய சைவபரிபாலன சபையின் அதிகார சபைக் கூட்டத்தில் கீழ்க் காணும் தீர்மானம் திரு. R. சிவகுருநாதர் அவர்களாற் பிரேரிக்கப்பட்டுத் திரு. S. அண்ணாமலையால் அநுமதிக்கப்பட்டு நிறைவேறியது:-

"யுத்த காலம் முடியும் வரையும் இருப்பதாக இருந்தாலுங்கூட விலைமகளிர் விடுதிகளை ஏற்படுத்துவது இந்நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடைவிளைப்ப தொன்றாகலின், அவற்றை ஏற்படுத்துவதற்கு அநுமதியளிக்க வேண்டா மென்று யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை இலங்கை அரசாங்கத்தாரை வேண்டிக் கொள்கின்றது."

## வறிய மாணவர்க்கு இலவச புத்தகங்கள்

புத்தகங்களின் விலை அதிகரித்திருப்பதனால் வறிய பிள்ளைகளுக்கு இலவசமாகப் புத்தகங்கள் விநியோகிப்பதற்கான ஒரு திட்டம் கல்வி இலாகாவால் ஆலோசிக்கப்படும்.

இலவசமாகப் புத்தகங்கள் விநியோகிப்பதற்காக ஒரு திட்டம் கல்வி இலாகாவால் ஆலோசிக்கப்படும்.

இலவசமாகப் புத்தகங்கள் கொடுக்கப்படவேண்டிய மாணவர்களின் பெயர்ப்பட்டியல்களைத் தயாரித்து அனுப்புமாறு பாடசாலைகளின் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுவார்களென்று தெரிகிறது.

## பொலநறுவைக்குக் கல்வி மந்திரி விஜயம்

கல்வி மந்திரி மிஸ்டர் ஸி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா வடமத்திய மாகாணத்திலுள்ள சிதைந்த புராதனக் கட்டிடங்களைப் பார்வையிடும் பொருட்டுப் புதைபொருள் ஆராய்ச்சிக் கொமிஷனருடன் பிரயாணமானார்.

மந்திரி பொலநறுவை சிகிரியா முதலிய இடங்களுக்கு விஜயஞ் செய்வதுடன் மெதிரிகிரிவாவிலுள்ள முக்கியமான பாழடைந்த கட்டிடங்களையும் பார்வையிடுவார்.

## தேவி மகோற்சவங்கள்

புலோலிப்பசுபதீசர் கோவில், நல்லூர்ச்சட்டநாதசுவாமி கோயில், திருநெல்வேலிச் சிவன்கோயில், ஆவரங்காற் சிவன்கோயில், வல்லை வைத்தியேசுவர சுவாமி கோயில் முதலாம் சிவாலயங்களில் வருகிற திங்கட்கிழமை (26-7-43) துவஜாரோகணமாகித் தேவியுற்சவம் நடைபெறும். ஆடி மாதம் 18-ந் திகதி (3-8-43) செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் அடுத்த நாளாகிய புதன்கிழமை பூரநட்சத்திர புண்ணிய தினத்தன்று தீர்த்தமும் நிகழும்.

## சிஸிலியின் தலைநகர் கைப்பற்றப் பட்டதாக அறிவிப்பு

### தீவின் முக்கால் பாகம் நேசப்படைகள் வசமாயிற்று

சிஸிலியில்பாலெர்மா துறைமுகம் கைப்பற்றிவிட்டதாக உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

சிஸிலியின் தலைநகரமான பாலெர்மாவின் வீழ்ச்சிக்குப்பிறகு மேற்கு சிஸிலி அனைத்தும் அமெரிக்கர் கையில் வந்துவிட்டது. மெஸினா தீபகர்ப்பத்தை நோக்கி அவசர அவசரமாக அச்சுப் படைகள் வாபஸ்பெற்று வருகின்றன. அமெரிக்க முன்னணிப் படைகள் பாலெர்மாவை வியாழக்கிழமையன்று காலை கைப்பற்றின. தலைநகரைக் கைப்பற்றிய அமெரிக்கப் படைகளுக்கு எதிர்ப்பு மிகவும் குறைவாகவே இருந்தன. பாலெர்மா துறைமுகம் நேசதேசப் படைகளுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும்.

பாலெர்மா இத்தாலிய ராஜ்யத்திலேயே மிகப்பெரிய துறைமுகங்களில் ஒன்றும்.

வடஆபிரிக்காவிலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:-

என்ன வீழ்ச்சிக்குப்பிறகு ஏறக்குறைய 58 மணி நேரம் கழிந்து பாலெர்மா வீழ்ச்சியுற்றிருக்கிறது எட்டாவது இராணுவ மிருக்கும் போர்முனை எங்கும் கடும்போர் நடைபெற்று வருகிறது. ஜெர்மானியருக்குச் சேதம் அபாரமாக ஏற்பட்டிருக்கிறது. பாலெர்மாவின் வீழ்ச்சிக்குப் பிறகு சிஸிலியின் அச்சுப்படைகளின் நிலைமை முற்றிலும் மாறிவிட்டதென்று நேச இராணுவ அதிகாரியொருவர் கூறினார். தீவின் வடகிழக்குப் பகுதியில் ஜெர்மானியர் இப்பொழுது நேசப்படைகளால் நெருக்கப்பட்டுத் திண்டாடுகின்றனர். அவர்கள் வசம் மெஸினா துறைமுகம் ஒன்றுதான் இருக்கிறது. அதுவும் நேச விமானங்களால் அடிக்கடி தாக்கப்படும் சத்துரு கப்பற் தளங்களும் நீர்மூழ்கித் தளங்களும் நேசதேசத்தினர் கையில ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ந்து வருகின்றன.

பாலெர்மாவின் வீழ்ச்சிக்குப் பிறகு சிஸிலியின் முக்காற்பாகம் நேசப்படைகள் வசமிருக்கிறதென்று ராய்ட்டரின் இராணுவநிருபர் எழுதுகின்றார்.

## டிஸ்திறிக் நீதிபதிக்கு விரோதமான வழக்கு

### என்பிள்ளை தாய்பொறுப்பில் இருக்கவொண்ணாது என்பதற்கு நியாயம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதிகளுளொருவராகிய மிஸ்டர். L. W. டீ. ஸில்வாவிற்கு விரோதமாக அவரது மனைவி தொடர்ந்துள்ளவழக்கு, சென்றவாரம் கொழும்பில விசாரணை செய்யப்பட்டபோது எதிரியாகிய மிஸ்டர். L. W. ஸில்வா சொல்லிய வாய்ப்பிறப்பு வருமாறு:

"என் குடும்ப வாழ்க்கை ஆறுதலற்றது; சென்ற 1940-ம் ஆண்டில் நான் என் மனைவியின கல்யாணப் பதிவைத் தள்ளுவதற்காக ஒரு வழக்குத் தொடர்ந்தேன்; ஆனால் அது சமாதானஞ் செய்யப்பட்டது. நானும் மனைவியும காலியில் இருக்குங் காலத்தில், என்மனையாள் நாங்களிருந்த மேல்வீட்டு யன்னலிலிருந்து குதித்துத் தான் உயிர்விடுவதாக என்னைப் பலமுறை வெருட்டியதுண்டு; என மனைவி கிறீஸ்து சமயத்தவள்; நான் பௌத்த சமயத்தவன்; என் பிள்ளையும் என் சமயத்தையே அநுசரிக்கச் செய்ய வேண்டுமென்பது என் நோக்கம். அல்லாமலும் என் மனைவிக்கு இடையிடையே மயக்கம் வருவதுமுண்டு; அந்த நேரத்தில் என்பிள்ளை அவள் வசமிருந்தால பிள்ளைக்கு ஆபத்து வருதலுமகூடும். அதனாலறான குழந்தை என் பொறுப்பிலிருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்

வழக்காளி பக்கத்து நியாயவாதியின் கேள்விகளுக்குவிடை:- எனக்குக் கோபம் இடையிடையே மூள்வதென்பதை நான் மறுக்கவில்லை; ஆனால் நான் பெருங் கோபியல்லேன்; என வேலைக்காரருக்கு நான் ஒருபோதும் அடித்ததில்லை; ஆனால் அவர்களைக் கண்டித்ததுண்டு.

நீதிபதி: நீர் யாழ்ப்பாண நீதிதலத்தில இடையிடையே பெருஞ் சத்தமிட்டுப் பேசுவதுண்டோ?

விடை: இடையிடையே அப்படிச் செய்வதுண்டு; யாழ்ப்பாணத்துள்ள நீதிதலத்தில் அப்படிச் சத்தம் போடாமல முடியாது.

## 54 கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு

கொழும்பு நகரின் கூட்டுறவுத் திட்டத்தின்கீழ் இதுவரை 54 கூட்டுறவுச் சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருக்கின்றன. கொழும்பில் ஆகமொத்தம் 105 கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். எஞ்சிய சங்கங்கள இம்மாதக் கடைசிக்கு முன் பதிவு செய்யப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது.

## பண்டிதநேருவின் அறிக்கைக்குஎதிர்ப்பு

### காங்கிரஸிலிருந்து பழையமந்திரி ராஜிநாமா

நாகபுரி ஜூலை 18

பழைய காங்கிரஸ் மந்திரி ஒய். ஷரீப் காங்கிரஸிருந்து தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டார்.

நமது தேசத்தில் ஒருபுறம் அரசாங்கக் கட்சியும் மறுபுறம் காங்கிரஸ் கட்சியும் இந்த இரண்டைத் தவிர வேறு கட்சியே கிடையாதென்று பண்டித ஜவஹர் கூறியதால் முஸ்லிம்லீகும் முஸ்லிம் சமூகமும் புண்பட்டு விட்டதாக ஷரீப் கூறுகிறார்.

இந்த ராஜிநாமாவால் தமக்கு மகாத்மா பேரிலுள்ள மதிப்புக் குறைந்துவிடப் போவதில்லையாம்.

## எல்லா ராஜீயக் கைதிகளும் விடுதலை

திருவனந்தபுரம் ஜூலை 19—

இன்று திருவாங்கூர் சட்டசபைகளின் ஒன்றுசேர்ந்த கூட்டத்தில் திவான் ஸேர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் பேசுகையில் எல்லாப் பாதுகாப்புக் கைதிகளையும் ராஜீயக் கைதிகளையும் விடுதலை செய்வதாக அறிவித்தார்.

இப்பொழுது சமஸ்தானத்தில் அமைதி நிலவுவதாலும் பொதுமக்கள் பொதுவாக ஒத்துழைக்க முன்வருவதாலும் ராஜீயக் குற்றங்களுக்காகத் திருவாங்கூர்ப்பாதுகாப்புச் சட்டப் பிரகாரம் தண்டிக்கப்பட்ட எல்லாக் கைதிகளும் மற்றவர்களும் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகத் திவான் தலைவர் கூறினார்.

## சந்தையில் கத்தியாற் குத்தப்பட்டு மரணம்

மிரிகமை ஜூலை 21—

மிரிகாமத்தி லிருந்து ஏழுமைல் தூரத்திலுள்ள முத்தாரகமைச் சந்தையில் எமனிஸ் சிங்கோ என்னுமொருவர் கத்திக்குத்துக் காயங்களுடன் இறந்திருக்கக் காணப்பட்டார். நீண்டகாலமாக இருந்துவந்த தகராறு காரணமாக இவர் தாக்குண்டாரென்று நம்பப்படுகிறது.

மிரிகமைப் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் ஈ. எல். அபயகுணவர்த்தனா விசாரணையை நடத்தி வருகிறார்.

மிரிகாம டிஸ்திறிக் வைத்திய அதிகாரி டாக்டர். ஸி. குணவர்த்தனா பிரேதப் பரிசோதனையை நடத்தினார்.

## இரட்டிப்பு விலைக்கு வெங்காயவிற்பனை

சென்ற செவ்வாய்க்கிழமை புறக்கோட்டைச் சிரிபினா லேனைச் சேர்ந்த பி. கே. புஞ்சிநோனா என்னும் ஸ்திரீக்கு மொத்தம் ரூ 50 அபராதம விதிக்கப்பட்டது.

குறித்த ஸ்திரீ வெங்காயத்தைக் கட்டுப்பாட்டு விலையைப்போல் இருமடங்கு விலைப்படி விற்பனை செய்ததாகவும வெங்காயத்தின் விலைகள் எழுதப்பட்ட பட்டியல் ஒன்றைக் கடையில வைத்திருக்கத் தவறியதாகவும இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஹு
ஆடிமீ ௧௦௨ திங்கட்கிழமை

## இந்தியாவிலிருந்து அரிசி இங்கு வராதா?

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அரிசி இப்போதைக்கு அனுப்புதல் முடியாதென்ற கருத்துப்பட இந்திய மத்திய அரசினர் டில்லிமா நகரிலிருந்து இப்பொழுது இலங்கையரசினர்க்குத் தெரிவித்துவிட்டார்கள்; இப்படி அந்த அரசினர் இலங்கை யதிகாரிகளுக்குச் சொல்லுவரென்பதை இங்குள்ள மக்கள் முந்தியேயறிந்திருந்தனரேனும், அரிசியில்லையென்ற செய்தியைக் கேட்டவுடனே இங்குள்ளாரெவர்க்குங் கவலையுண்டாமென்பது காத்திருக்கத்தக்கது. இந்தியாவிலிருந்து இலங்கை மக்களுக்கு அரிசி ஒழுங்கு செய்யும்படி சென்றிருந்த திரு. K. வைத்தியநாதனவர்கள் இற்றைக்குச் சில வாரங்கட்கு முன் அங்கிருந்து இங்கு மீண்டுவந்து கொழும்பிலுள்ள உணவுக்கட்டுப்பாட்டுத் தலைமையதிகாரியோடு யோசித்தபோதே, இங்குள்ள மக்கள் இனிமேல் அங்கிருந்து இங்கு அரிசிவருமென நம்பியிருக்கவொண்ணாதெனச் சொல்லிக் கவலைப்படலாயினர். திரு. வைத்தியநாதனும் அடுத்த இரண்டு மூன்று மாசங்கட்கு இந்தியாவிலிருந்து இங்கு அரிசிவருமெனக் காத்திருத்தல் வீண் என்னுங் கருத்துப்படக் கூறியுள்ளார்; இப்பொழுது எங்கள் உணவின் பொருட்டு இறக்குமதி செய்யப்படும் அரிசியும் இந்தியாவிலிருந்து வந்ததல்லவென்பதை அவர் அந்த நேரத்தில் வெளிப்படுத்தியிருந்தார்.

திரு. வைத்தியநாதன் சொன்ன அருட்டமும் இங்குள்ளவர்கள் நினைத்திருந்தமையும் இப்பொழுது உள்ளவாறே நடைபெறலாயின; இலங்கை அரிசிக் கட்டுப்பாட்டின் நிலைமை இன்னமும் இறுகுமென்றெண்ணி இங்குள்ள மக்கள் புத்தியாக நடந்துகொள்ள வேண்டும்.

எங்கள் அரிசி நிலைமை இப்படியாக, இந்த வாரம் சுகாதார வாரமென்பது இங்குள்ளார் எவரும் அறிந்த விஷயம்; இச்சுகாதார வாரத்திலே நடக்கும் முயற்சிகளும் ஆரவாரமுங் கொஞ்சமல்ல. எந்தக் கல்லூரியைப் பார்த்தாலும் எந்த வித்தியாசாலையைப் பார்த்தாலும் ஆங்காங்கெல்லாம் சுகாதாரக் காட்சி, பலவகைப் பொருட்காட்சி, உணவுப் பொருட்காட்சி, புதிய உணவுப்பொருள்களைப் புதிய முறையில் மக்கட்குச் சமைத்துக் காட்டுங் காட்சி, போதுபோக்குதற்காகிய பிள்ளைகளின் விளையாட்டுக் காட்சி முதலாம் பலகாட்சிகள் நடைபெறுகின்றன. இக்காட்சிகளையெல்லாம் காணுதற்காகத் தங்களை நன்கு அலங்கரித்துக் கொண்டு ஆடம்பரத்தோடு தெருவீதியிற் செல்லும் ஆடவர் மகளிரின் காட்சி மேலே சொல்லப்பட்ட சகல காட்சிகளைக் காட்டிலும் மேற்பட்டதாம். ஆனால், எந்த ஆரவாரமும் காட்சிகளும் இந்த வாரத்தோடு முடிந்தபின் இங்குள்ள மக்கள் அரிசியின் பொருட்டுக் காட்டவேண்டிய காட்சி என்னவென்பதுதான் இப்பொழுது புலப்படவில்லை.

"பனிபெய்து பயிர் விளையப் போவதில்லை" என்றாங்கு, இந்தக்காட்சிகளினாலே போதிய அரிசி அகப்படப்போவதுமில்லை, போதிய உணவையுண்டு சனங்கள் சுகாதாரமுறப்போவதுமில்லை. சனங்கள் உணவின் பொருட்டும் உடையின் பொருட்டும் திண்டாடும் வேளையிலே சுகாதார வாரமெனறால் அதன் அர்த்தமென்ன? இப்படியான வீண் ஆரவாரங்களையும் போலிக் காட்சிகளையும் விடுத்து இங்குள்ளமக்கள், இவர்களுள்ளும் விசேஷமாகப்பள்ளிக்கூட ஆசிரியர்கள உயர்தரவகுப்புமாணாக்கர்வித்தியாசாலைகளின அதிபர்களாயுள்ளவர்களாகிய இவர்களெல்லோரும் மனப்பூர்வமாக உணவுப்பொருள்களை விருத்திசெய்யவேண்டிய வழிவகைகளைத் தேடுதல் வேண்டும்; மாணாக்கர்களுக்கு விவசாயம் கைத்தொழில் முதலியவற்றிற்காகிய கல்வியைப் பற்றி அம்மாணாக்கர் சிந்தை அந்த விஷயங்களிற் புகச்செய்தல் வேண்டும். இப்படிச் செய்தலால் உணவுப்பொருள் ஒரு அளவிற்கு விருத்தியடைதலுங் கூடும். இதனை விடுத்து இந்திய அரிசி இப்போதைக்கு இங்கே வருமென்று நம்பியிருப்பதனாற் பசிஅதிகப்படுமேயொழியத் தணியப்போவதில்லை.

---

## கொழும்புத் தமிழ்க் கழகம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (18-7-43) பிற்பகல் 5-30 மணியளவில் சங்கநூற் கருத்துக்கள் சம்பந்தமான இரண்டாவது பிரசங்கம் திரு. வ. வி. மயில்வாகனம் பி. ஏ. அவர்களால் நடத்தப்பட்டது. அப்பொழுது "முல்லைப்பாட்டு" ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. திரு. இ. இளையதம்பி கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

கழக ஆதரவின்கீழ்ப் பண்டித, பாலபண்டித, பிரவேசபண்டித வகுப்புக்கள் தகுந்த ஆசிரியர்களால் நடத்துவிக்க வேண்டுமென்னும் யோசனை இருந்து வருகிறது. ஆர்வமுள்ள அன்பர்கள் இதுபற்றிக் காரியதரிசிக்கு அறிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

வருகிற ஞாயிற்றுக்கிழமை 25-7-43 பிற்பகல் 6-15 மணிக்கு டி. எஸ். மணிபாகவதர் கழக இல்லத்தில், தமிழிசைக் கச்சேரி நடத்துவார்கள் எனக் காரியதரிசி அறிவிக்கிறார்.

---

இலக்கியப் பகுதி:

# அழகர் கிள்ளைவிடு தூது

[ க. கி. ந. ]

III

"நான் திருமாலைத் தரிசனஞ் செய்யப்போய் ஊரெல்லாந் தூற்றுகின்ற அலரைக்கொண்ட கதையைச் சொல்லுகின்றேன் கேள். அவன் பெருமைகளோ அளப்பில. அவன் நரசிங்க வடிவங்கொண்டு இரணியனைச் சங்கரித்தவன். கிருஷ்ணாவதாரத்திற் பூதனை தந்த பாலையுண்டவன். அதுவும் போதாதென்று பசித்து வேதனையும் (துன்பம், பிரமதேவன்) பெற்றவன். பிள்ளைமை நீங்காத பெற்றியான். கல்லைப் பெண்ணாக்கும் மலர்போன்ற காலினன். கணிகண்ணர் என்னும் புலவர் பொருட்டுத் தன் படுக்கையைத் தூக்கிச் சென்றவன். விண்ணவர்களுக்காக ஆமுது கடைந்தவன், சீதையோடு கானங்கடந்தவன். தண்டகாரணியத்தைக் கடந்து சென்ற சரன் என்னும் வேடனுக்கு மெல்லிய கால்நகங்களைத் தந்தவன். என்காதல் வெள்ளத்தில் அமிழ்ந்தினேன். பிரளயகால வெள்ளத்திலே மிதந்தவன். என் உள்ளத்தே உள்ளவன். எனினும், உலகத்துக்கப்பாலான்.

"வெட்ட வெறுவெளியி லேநின்றுந்
தோற்றுதான்
கிட்ட விருந்துங் கிடையாதான்—
தட்டாதென்
எண்ணிலே மாய னெனும்பேரி
னாலொளிப்போன்
கண்ண னெனும்பெயராற்
காண்பிப்போன்-எண்ணுங்கால்
எங்கு மிலாதிருந்தே யெங்கு
நிறைந்திருப்போன்
எங்கு நிறைந்திருந்தே யெங்கு
மிலான்-அங்கறியும்
என்னை யெனக்கொளித்தி
யானென்றுங் காணாத
தன்னை யெனக்கருளுந் தம்பிரான்-
முன்னைவினை
கொன்று மலமாயைக் கூட்டங்
குலைத்தென்னை
என்றுந் தனியே யிருத்துவோன்".

(இவ்வடிகளிற் பக்திச்சுவை நனிசொட்டுவதைக் காணலாம்) 'நானே பிரமன்; நானே எல்லாவுயிரும்; அவ்விருவரையும் ஏவுபவனும் நான்,' என்று உணர்த்தும்பொருட்டுக் கோவலரிடத்தே பசுவும் பசுவின் கன்றும் அவற்றை மேய்ப்பவர்களுமாகி நின்ற பரஞ்சோதி. நரகப் பேரிருள் நீக்குதற்குப் பெருந்தவம் வேண்டாமென்று தன்னுடைய சங்கத் தொனியைக் கேட்டாரை நரகினின்றும் மீட்பவன் (துரியோதனனைச் சேர்ந்தவர்கள் தீது செய்தவராயினும் கண்ணபிரானது சங்கத்தொனியைக் கேட்டமையின் நரகம் புகாராயினர்; ஆதலின் நரகப் பேரிருள் நீக்கச சங்கத்தொனி, தொனிப்பிப்போன் எனப்பட்டது என்ப) உடலில ஆருயிர்கூட்ட அயன்வேண்டாபாருமெனக் குழலோசையெனும் துங்கத்தொனியுந் தொனிப்பிப்போன். (வேய்ங்குழலோசையால் பட்டுப்போனமரங்கள் தளிர்த்தனவாதலின், இவ்வாறு கூறப்பட்டதென்ப.) 'ஆதிமூலம் இவன்' என்று உணர்ததற்கு ஒரு கரியும் (யானை, சாட்சி) உடையவன். சிருஷ்டிக்குத் தானேமூலகாரணன் என்பதைப் பிரமாவைத் திருவுந்தியால் வெளிப்படுத்திப் புலப்படுத்துவோன். அங்ஙனமே பிரளயகாலத்தில் உலகங்களை விழுங்கித்துடைப்போனுந் தானே என்பதை உணர்த்துவோன். [illegible] தமிழினாலே ஆதி [illegible] கருத்துக்களை நாலாயிரம் பிரபந்தங்களாக ஓதியருளிய ஆழ்வார்கள் பதின்னொருவருடைய உள்ளத்திலே எழுந்தருளியிருப்பவன். தன் பாதமாகிய செந்தாமரை மலரிலிருந்து சிந்திய தேனைப்போல மந்தாகினி (கங்கை) உண்டாகும் பெருமையுடையவன். அறிதுயில் கொள்பவன். தன் தாயாகிய யசோதைக்குத் தன்னுள்ளும் புறம்பும் உலகம் இருப்பதை வாயைத் திறந்துகாட்டி உணர்வித்தோன். பிறவியாகிய கடலில் அவித்தையாகிய உவர்த்தன்மையை வாங்கி விடுதற்காக முகில்போன்று விளங்குபவன். பரசமயவாதங்களாகிய நதிகள் அனைத்தும் வந்து தன்பால் அடங்கக் கரிய கடல்போல இருப்பவன், உலகமாகிய ஊஞ்சலில் எழுந்தருளியிருப்பவனும் அதனை இயக்குபவனும் தானேயாகின்ற அண்ணல். வேடர்கள் ஒரு பார்வை மிருகத்தால் நூறு மான்களைப் பிடிப்பதுபோல,

-'தான் படைத்த
என்பிறவி யெண்பத்து நான்குநூ
றாயிரமும்
தன்பிறவி பத்தாற் றணித்திடு
வோன்"

அவனுடைய மலை சோலைமலை. அவனுடைய நதி நூபுரநதி. (ஈண்டுக் கவிஞர் கூறும் உவமை சிறப்புடையது, அஃதாவது இந்திரனைப் போல இடபாசலம் விளங்குகின்றது. அம்மலையிலுள்ள சுனைகள் அவ்விந்திரனுடைய கண்கள் போன்று விளங்குகின்றன. தோளிற்புரளும் முத்தாரத்தைப்போல அந்நதி விளங்குகின்றது என்பது) அவன்நாடு பாண்டிநாடு. (சோழநாடும் பாண்டிநாடும் கண்போன்று விளங்க, அவற்றுள் வலக்கண் போன்று விளங்குகின்றது பாண்டிநாடு என்கின்றார்; தேசாபிமானம் போலும்) அவனுடைய பதி சீபதி. அவன்மாலை துளபமாலை. அவன் யானை அத்துவிதானந்தம். அவன் குதிரை வேதம். அவன் கொடி கருடன. அவன் மும்முரசையும் உடையவன். தவநிலை ஆணை தரித்தவன். இவ்வாறு அவன் தசாங்கங்களையும் அறிக.

அவன் கண்ணபிரானாக வந்த காலத்துத் தன் மேனியிலே சிந்தின வெண்ணெய்ப் பிதிர்கள் வானிலுள்ள உடுக்கணங்கள் (நக்ஷத்திரங்கள்) போலவும் கையிலேந்திய வெண்ணெயுருண்டை சந்திரன் போலவும் விளங்க அதனை உண்டவன். சூரிய சந்திரர்களாகிய கண்களையும அவற்றைப்போன்ற சங்கு சக்கரங்களையும் உடையவன. அவன் செங்கைத் தலத்திலே சங்கத்தையுடைமையாலும், மதுரையிலுள்ள சங்கத்தில் வீற்றிருந்து தமிழ் ஆராய்ந்தமையினாலும் சங்கத் தழகனென்னும் பெயரையுடைய தம்பிரான்." என்றிவ்வாறெல்லாம் திருமால் பெருமைகளையும் அவன்றன் பிற சிறப்புக்களையும் தலைவி மிக அழகுபெற எடுத்துக் கூறுகின்றாள், கூறி, அத்தகைய திருமால பொதியமலையின் சந்தனச் சோலையினூடே தவழ்ந்து மந்தமாருதமாகிய தென்றல் வீசுங் காலத்திலே, கோடைத்திருவிழாக் கொண்டருளி, சிபதியோர் கூடவிற் கூடலெனுங் கூடற்றிருநகரில் (சீபதியோர் கூடுதலால் கூடலென்

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமண்டலச் சரித்திர தீபம்

## ஆரியச்சக்கரவர்த்திகள் என நாமம்பூண்ட யாழ்ப்பாணத்து மன்னர்கள்

(கொழும்பு கோட்டாஞ்சேனை, திரு. வை. முத்துக்குமாரசுவாமி)

I

மணற்றி, மணலூர், நாகதீபம், மகிஷ தீபம், மணிபல்லவம் எனப் பல பெயர்களால் வடஇலங்கை வழங்கப்பட்டு வந்தது. பண்டைக் காலத்தில் இது நாகருக்கு உறைவிடமாக விளங்கியது. விஜயன் காலத்துக்கு முன்பும் பின்னரும் பரத கண்டத்திலிருந்து பல தமிழ்க் குடிகள் சோழ சேர பாண்டிய மண்டலங்களை விட்டு இந்நாட்டிற் குடியேறினர். படையெடுத்து வந்து நம் ஈழமண்டலத்திற் குடியேறியவரும் பல தமிழர். ஆகவே ஈழமண்டலமும், தமிழகத்துடன் சார்ந்து தமிழ்மக்களின் தொன்மைத் தாய்நாடாக விளங்கிற்று. வட இலங்கையில் பல அரசர்கள் வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு தலைநகரங்களை நிறுவி தமது ஆட்சியைச் செலுத்தி வந்தனர். ஒரு காலத்தில் இவர்கள் இலங்கை முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் உட்படுத்தினர். திராவிட மக்களின் மன்னருக்கு "ஆரியச் சக்கரவர்த்திகள்" என்னும் பட்டம் எவ்வாறு கிடைத்தது என்பதைப்பற்றி நீங்கள் அறிய ஆவலுடன் இருப்பீர்கள். அம்மன்னர்கள் எங்கெங்கு தமது இராசதானிகளை நிறுவினார்கள், எக்காலத்தில் இருந்தார்கள் நமக்கு அவர்கள் என்ன சேவை புரிந்தார்கள் என்னும் இன்னோரன்ன விஷயங்களை நீங்கள் அறிய விரும்புவீர்கள். ஆகவே நாம் இப்பொழுது இவற்றைப் பற்றி ஆராய்வோம்.

நம் ஆரியச் சக்கரவர்த்திகள் கங்கை வம்சத்தைச் சார்ந்தவர்கள். இஃது "செகராசசேகரமன் கங்கை நாடன்" என்று செகராசசேகர மாலையிலும், "மன்று கண்டருளுங் கங்கை யாரியன்" என்று இரகுவம்சத்திலும், "கங்கை நாடன் கற்றவர் திலகன்" எனப் பிற இடங்களிலும் கூறப்பட்டிருப்பதிலிருந்து நாம் நன்றாய் அறியக்கிடக்கின்றது.

இராமேச்சுவரம் திருமித்த காலத்தில் இராமபிரானால் இரு பிராமணர்கள் இந்தத் தலத்தைப் பேணும்படி விடப்பட்டனர். இவர்கள் ஆருக்கள் (ஆரியர்) என்று அழைக்கப்படும் குஜறற (கூர்ச்சரப் பகுதிப்) பிராமண வம்சத்தைச் சார்ந்தவர்கள். இவர்களுள் ஒருவன் யாழ்ப்பாண அரசருள் ஒருவனுடைய குமாரத்தியை வதுவை செய்தான். ஆகவே அவ்விராச்சியத்திற்கு உரிமைக்காரரானார். இக்கர்ண பரம்பரையை கைலாசசுவாமியும், பேட்டோலாச்சியும், பின்னர் காசிச்செட்டியும் தாம் எழுதிய வரலாறுகளில் குறித்துப் போயினர். இது செகராச சேகர மாலையில்:—

"பூசனை செய்மினி ரெனக்
கருணை புரிந்தவர் தங்களிலிருவர்
காசினி தாங்கும்படி வரங்
கொடுத்தும் கமழ் செழுந்துளப
மாலிகையு
மாசறு சுருதி யாரிய வேந்தன்
றணிமணிப் பட்டமுங் கொடுத்துத்
தேசுறு குடையு மொற்றையும்
வெற்றித் திகழ்விடைத் துவசமு
நல்க"

என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

ஆரியச்சக்கரவர்த்திகளின் கொடி விடைக்கொடியே என்பது பின்வரும் மேற்கோள்களால் நன்றாய் விளங்கும்.

"சேவணி துவசன் சிங்கையெங்
கோமான் செயசேகராச சேரமன்'
என்பது செகராச சேகரமாலை.

"அண்டருலக நிமிர்ந்தாடும்
பரிசுடைத்தாய்க்
கொண்ட விடைகாட்டுங்
கொடியினன்"
என்பது "கைலாயமாலை"

'வெற்றி விடைக் கொடியார்
மேலாரியர் குலத்தி
னுற்ற மடப்பளியிலுள்ளோரும்"
என்பது கிள்ளைவிடுதூது.

"விடலான் வயமா விளங்கிய
கொடியான்"
என்பது தக்ஷிண கைலாச புராணம்,

ஆரியச் சக்கரவர்த்திகளின் வம்சம், பரிசைபெற்ற தலம், தாதா, வரிசைகள் என்பனவற்றை கங்கை வமிசத்தவர்களினுடைய கோத்திரம் முதலியவற்றோடு ஒப்பிட்டு நோக்கும்பொழுது ஆரியச் சக்கரவர்த்திகள் கீழ்த்திசைக் கங்கரே என்பது தெளிவு. ஒற்றை, கொற்றக்குடை, விடைத்துவசம் என்னும் வரிசைகள் இவ்விரு பாலார்க்கும் ஒன்றே. இருவரும் கங்கை வமிசத்தைச் சார்ந்தவர்களே. இக் கங்கரது தலைநகருள் ஒன்றான சிங்கபுரப் பெயரை, கலிங்க தேசத்து அரசர் வடஇலங்கைத் தலைநகருக்கிட்டுச் சிங்கைநகர் என வழங்கினர்.

ஆரியச் சக்கிரவர்த்திகள் பழைய காலந்தொட்டே இராமேசுர சம்பந்தம் பூண்டு விளங்கினர். இராமேச்சுரத்தை அவர்களே ஆட்சி செய்தனர். ஆரியச் சக்கரவர்த்திகள் எல்லாம் திருக்கோணமலை, திருக்கேதீச்சுரம், இராமேச்சுரம் என்னும் மூன்று தலங்களையும் தினந்தோறும் ஒவ்வொன்றாக முறையே தரிசித்து உச்சிப்போசனம் செய்யும் நியமமுடையராய் இருந்தார்கள்; அதற்காக யந்திர அன்னப் பறவையொன்று வைத்திருந்தார்கள்; அவ்வன்னப் பறவையிலிருந்து யந்திரத்தை முறுக்கி அஃது அந்தரத்தில் எழுந்து செலுத்திய வழியில் ஆகாயத்தில் பறக்குமென்றும் அதைத் கொண்டே மூன்று நாழிகையில் இராமேச்சுரத் தரிசனம் முடித்து மீண்டு வருவர்; இராமேச்சுரத்திற் சுவாமிக்கு அபிஷேகத்துக்குத் தினந்தோறும் நெடுந்தீவிலிருந்து பாலும், பூசைக்குக் கச்சைத்தீவிலிருந்து பூவும் ஆரியச்சக்கரவர்த்தியால் அனுப்பப்பட்டன என்னும் ஐதிகத்தைத் திரு. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் தாம் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். ஆரியச் சக்கரவர்த்திகள் "சேது" என்னும் மங்கள மொழியோடு தஞ் சாதனங்களை ஆரம்பித்தனர். மேலும் அவர்களுடைய முத்திரைக் காசுகளில் "சேது" என்னும் வாசகமும் விடைக்கொடி உருவமும் காணப்படுகின்றன. சேதுக்காசிகளை சேதுபதிகளின் காசுகள் என முத்திரை வித்தையாளரெல்லாம் மொழிந்தனர். ஆயினும் சேதுவும் இடபமும் கொண்ட நாணயங்கள் நம் ஆரியச் சக்கரவர்த்திகளின் (யாழ்ப்பாணக் காசுகளே) எனத் தெளிவாகத் தொன்மையாராய்ச்சிப் பத்திரிகையில் எடுத்து விளக்கிய பெருமை தமிழ்மொழியும் யாழ்ப்பாணச் சரித்திர ஆராய்ச்சி வலனுராகிய [illegible] பிரகாசருக்குரியது.

வட இலங்கையில் நாகர்கள் திகழ்ந்த காலத்தில் மணிபுரம் எனப்படும் இடமே இராசதானியாக விளங்கியது. இந்த இடம் தற்பொழுது கந்தரோடை எனக் கூறப்படும் ஊருக்கு அணித்தாக இருந்தது. கந்தரோடைக்குச் சமீபத்தில் இன்றும் கதிரைமலை என்னும் ஓர் இடமுண்டு. உக்கிரசிங்கன் என்னும் மன்னன் கதிரைமலையில் வாசஞ்செய்தான்; பின்னர்ச்சிங்கை நகருக்கு தலைநகரை மாற்றினான் என்ப. 8-ம் நூற்றாண்டு தொட்டு சிங்கை நகரைப் பற்றிய வரலாறுகள் கேட்கப்படுகின்றன. சிங்கை நகர் அரசர்கள் சில காலங்களில் சோழமன்னர்களுக்குத் திறை இறுத்தும், பொலநறுவையை ஆட்சி செய்த சிங்கள மன்னர்களுடன் சம்பந்தம் செய்துமிருந்தார்களெனத் தெரியவருகிறது. பராக்கிரமவாகு மன்னன் வடஇலங்கையில் உள்ள சிங்கபுரத்துக் காலிங்க வம்சத்தைச் சேர்ந்தவன் என்பது கட்டுக்கரைச் சாசனம் ஒன்றில் 'ஸ்ரீமத சிங்ஹபுரே ஜாத ஸ்ரீபராக்கிரமவாகு' என வரைந்துள்ள வசனத்திலிருந்தும் பிறவற்றாலும் நனகு அறியக்கூடியது.

முதலாம் பராக்கிரமவாகு சிங்கையரசர் வம்சத்தைச் சார்ந்தவன் என்பதைக் காட்டாது மகாவம்சம் கையாண்ட வழிகள் எல்லாம் புகழேந்தி முதலிய புலவர்கள் கூற்றால் வலியற்றுப் போனதைக் காணலாம். புகழேந்திப் புலவர் விக்கிரம சோழனுடைய அரண்மனைப் புலவர். அம்மன்னனுடைய காலம் (கி. பி. 1118 தொடக்கம் 1146) வரையும் 'வெண்பாவிற் புகழேந்தி' என்னும் பெயர் பெற்றவர். இவர் இலங்கைக்குக் கதிர்காம யாத்திரையின் பொருட்டு வந்தார். அவர் சிங்கை நகரில் ஆட்சிசெய்த மன்னனிடம், அவரைப்பாடி, யானையும் நிதியும் பரிசிலாகப் பெற்றார், அவர் இதைக்குறித்துப் பாடிய செய்யுள் வருமாறு:-

'பாவலன் வாசலில் வந்திபம்
வாஙகப் படி புரக்குங்
காவலர் நிற்கும்படி வைத்தவர்
கண்டியோன்பதிலும்
மேவலர் மார்பினுந்
திண்டோளினுஞ் செம்பொன்
மேருவினுஞ்
சேவெழுதும் சிங்கை யாரிய
சேகரனே"

சிங்கை நகர் அரசன் இறந்த பொழுது புகழேந்திப் புலவர் பாடிய செய்யுள் இது.

ஆ ஆ வீதியோ வடலாரியர்
கோமான்
ஏ ஏ வலரா விறந்தநாள்— ஓஒ
தருக் கண்ணிலுங் குளிர்ந்த
தண்ணளி தந்தாண்ட
திருக்கண்ணி னுஞ்சுடுமோ தீ"

12-ம் நூற்றாண்டின் முற்கூற்றில் ஈழநாட்டில் பஞ்சம் வந்தது. அப்பஞ்சத்தைத் தீர்ப்பதன் பொருட்டுச் சிங்கைநகர் பரராசசேகரனுக்கு சோழநாட்டுப் புதுவைச் சடைய வள்ளல் (இவர் தான் கம்பரை ஆதரித்த வெண்ணெய்ச் சடையன்) ஆயிரங் கப்பல்களில் நெல் அனுப்பிப் பஞ்சத்தைத் தீர்த்தார். இதைப்பற்றிச் "சோழமண்டல சதகத்துப் பின்வரும் செய்யுள் கூறுவதாவது:—

"தேனார் தொடையார் பரராச
சிங்கப் பெருமான் செழுந்த
மிழுக்குக்
கானார் நெல்லின் மலைகோடி
கண்டிநாடு கரைசேரக்
கூனார் கப்பலாயிரத்திற் கொடு
போயளித்த கொடைத்தடக்கை
மானா கான் சங்கரன் சடையன்
வாழுஞ்சேர் சோழ மண்டலமே"

[illegible] கரை" என்பது சிங்கைநகரையே குறிக்கும்.

கேகாலைப் பகுதியில் உள்ள கொட்டகம என்னும் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டதும் இப்பொழுது இலங்கை நூதனசாலையில் வைக்கப்பட்டிருப்பதுமான ஒரு சிலாசாசனங்கூறுவது யாதெனில்:-

"கங்கணம் வேற் கண்ணிணையாற்
காட்டினார் காமர் வளைப்
பங்கயக்கை மேற்றிலதம்
பார்த்தார்—பொங்கொலிநீர்ச்
சிங்கைநக ராரியனைச்
சேராவனுரேசர்
தங்கள்மட மாதர் தாம்"

இவ்வெண்பாவிலிருந்து, மேலே நாம் எடுத்துக்கூறிய மேற்கோள்களினின்றும், சிங்கை நகர் அரசர்கள் "ஆரியச் சக்கரவர்த்திகள்" என்றும் "பரராச சேகரன்" "செகராச சேகரன்" என்னும் பட்டப் பெயர்கள் உள்ளவர்களாய் விளங்கினார்களென்பதும் தெள்ளிதிற் புலப்படுகின்றது. மேலும் சிங்கை நகர் கடற்கண் உள்ள தலைநகரம் என்பதும் தெளிவாகிறது. —வரும்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் ஜூலை 27

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 காலை இசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே வி வேணுகோபாலஐயர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஆர் கிருஷ்ணன் தம்பி வீணை 2 தமிழில்செய்திகள் 2·05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஆர் கிருஷ்ணன் தம்பி வீணை 5-45 இசைப்பயிற்சி 6 கே வி வேணுகோபால ஐயர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7·15 சாமுவேல்புத்தம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ரேடியோ நாடக இசை 8 மதராஸில் உள்ளபடி (பாலக்காடு ராமபாகவதர் பாட்டு) 9-15 பரத்மிலாப்† 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9·30 லண்டனிலிருந்துசெய்திகள் 9·45பதம் 10 இசை வேளை† 10-30 முடிவு.

### புதன் ஜூலை 28

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 மஹாராஜபுரம் வி கோதண்டராமன் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில்செய்திகள் 1-40 சிதாமணி சேஷாயி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 பி கே விஸ்வநாதசர்மா வயலின் 5·45 இசைப்பயிற்சி 6 மஹாராஜபுரம் வி கோதண்டராமன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 ரேடியோ பேட்டி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 பி கே விஸ்வநாதசர்மா வயலின் 8-30 அமெரிக்கவாக்குடேல்லி அஞ்சல் 8-45 நடராஜர் நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல் 10 மதராஸில் உள்ளபடி 10-30 முடிவு.

### வியாழன் ஜூலை 29

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 காலை கீதம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கோமளம், சீனிவாஸ்பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 துன்னக்குடி வெங்கடராம ஐயர்புல்லாங்குழல் 2 தமிழில்செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு ஆங்கிலம் 2-30 முடிவு.

மாலை 5 துன்னக்குடி வி வெங்கடராம ஐயர் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 கோமளம் சீனிவாஸ் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6–40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்தின் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 கே வி கேசவ பாகவதர் பாட்டு 9·20 ஆங்கிலத்தில் செய்திகள்9.30லண்டனிலிருந்து செய்திகள் 9·45 அரசியல் அமைப்புகள் ஆங்கிலப் பேச்சு 10 ஐரோப்பியசங்கீதம் 10–30 முடிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிப்பிரவாள நூல்கள்

(திரு. அ. வி. மயில்வாகனம், றேயல்கல்லூரி)

தண்டமிழ் மணங்கமழ் தென்னுடானது தனிச்சிறப்பெய்தி யிருந்த காலத்தில் வடசொல், திசைச்சொல், திரிசொல்லின்றித் தூய செந்தமிழே வழங்கிய நாடாயிருந்தது. பிற்காலத்தைய நாகரிக மேலீட்டினுல் ஆரியக்கலையின் அலைமோத அதற்கு எதிர்நின்ற தமிழின் கலையாகிய கரை, கரைந்து இடங்கொடுத்துவிட்டது! வடமொழிச் சொற்களும் கொள்கைகளும் இலக்கணவிதியும் தமிழுட் புகுந்தன. சங்கநூல்களும் பின்னைய நூல்களும் ஆரியக் கொள்கைகளை அறவொழிக்கவியலாது அலக்கணுற்றன. காலஞ் செல்லச் செல்ல வடமொழி, நூற்றுக்கு ஐம்பது அறுபது விகிதம் தமிழுட் கலப்புப் பெற்றது. அப்படிக் கலந்த பின் அம்மொழியைத் தமிழென்று கூறவும் பலருக்கு வாய் கூசிற்று. ஆகவின் அதற்குப் புறம்பான ஒரு சொல் வழங்கலாயிற்று.

அதுவே, மணிப்பிரவாளம் என்பது. ஆயினும் இச்சொல் தமிழிற்குப் புதிதன்று. 'பவளமோடு மணிமிடைந்தன்ன குன்றம்' (அகம் 14& 304) என்னும்போது, அரக்கத்தன்ன (red) செக்கிலததே காயாம் பூக்கள் (Memecylon Tinctorium) விரவிப் பரவி, முறையே பவளமும் மணியும் போன்று அம்மலையை அலங்கரித்தனவாகக் கூறப்படும். 'மணிமிடைபவளம்' என்று அகநானூற்றுள் வரும் பிரிவும் இவ்விரவுதற் பொருளேயே உணர்த்திற்று. இன்னும்வேறு சான்றுகளும் இச்சொற்றொடரின் தொன்மையைக் காட்ட உள.

ஆனல், மணிப்பிரவாள நடையில் நூல் எழுதத் தொடங்கிய காலம் மிகப் பின்னையது. எனினும் 10-ம் நூற்றுண்டு வலரயில் அதன் நடமாட்டம் தமிழ்நாட்டில் மிக வேரூன்றிவிட்டது என்னலாம். வைணவரும் ஜயினரும் பௌத்தரும் பழைய நூல்களுக்கு இம்மொழியில் உரை வகுத்தனர். வேறும் புராணக் கதைகளையும் இம்மொழியில் பெருக எழுதிப் பரப்பவும் முன் வந்தனர். இவர்களைப் பின்பற்றிய சில சைவ சித்தாந்தங்களும் தங்கள் தத்துவங்களை இம் மொழியில் எழுதி வைத்தனர். ஆனல், இது பலநாள் நிலை நிற்கவில்லை. விளக்கக்குறைவும் தத்துவப் பொருளும் சுருக்கமில் பெருக்கும் கிரந்த இலிபியின் இட்டமும் இவற்றின் இலக்கணமாதலின் மின்னல்போல் தோன்றி மறைந்தன. அன்றியும், 'காரற் காலத்தில் (Dark ages 200—700 A. D.) தோன்றிய பௌத்த ஜெயின நூல்கள் சைவ வைணவ சமயிகளின் எதிரிடையினுலும் போராட்டத்தினுலும் அழிந்துபட்டிருக்கலாம்.

ஆனல், தெலுங்கிலும் மலையாளத்திலும் மணிப் பிரவாள நூல்கள் மிகவுண்டு. மலையாளத்தில் சங்கதமொழித் தொடர்பை ஒரு சிறப்பாகக் கொள்ளுகிறர்கள். "It gives the harmony of linked sweetness long drawn out * வசனத்திலும் செய்யுளிலும் வடமொழி வழக்கு மிக அதிகரித்துவிட்டது. 'லீலாதிலகம்' என்னும் இலக்கணம் இதன் உபயோகத்தைக் கட்டுப்படுத்தவே தோன்றிற்று. தமிழில இலக்கிய வரலாறு எழுதிய எல்லா அறிவாளிகளும் இம்மணிப் பிரவாள நூல்களைக் குறை கூறினரன்றிப் போற்றினரில்லை. சூரிய நாராயண சாத்திரியார் தூற்றியும் விட்டார்? 'தமிழ்மொழி வரலாறு' என்னும் நூலுள் இதற்கெனப் புறம்பான ஒரு அத்தியாயம் எழுதி அதன்பயனின்மையையும் காட்டிவிட்டார். 'இப்படியாக அவருக்கு இத்தகைய ஆபாசபாஷை ஒன்று வகுக்குமாறு தூண்டிற்று;"† என்று அந்த ஆச்சாரியரைக் குறை கூறுகின்றார் இவர்.

அப்படியாயின் எளிய இனிய நடையில் பாடிவைத்துச் சென்ற தீர்த்தங்கார், ஆழ்வார் முதலியோரின் பாக்களுக்கு இப்படிக் கடினமான உரைவகுக்க ஏன் உள்ளமெழுந்ததோ? ஆரியர் நாகரிகமும் தமிழர் நாகரிகமும் இரண்டற்று ஒன்றுபடல் வேண்டுமென்பது ஒரு நியாயமாயிருக்கலாம். வடநாட்டிலிருந்து வந்த வித்தகாசிரியருக்குத் தமிழ் விரிவுற அறிவின்மையால் இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு நடைடைக் கையாண்டிருக்கலாம். அல்லது ஆங்கிலத்திற்போல் (See 'Expositor' 1663 A. D.) எளிதில விளங்காப் பீடுடைநடையொன்றைக் கையாளலே தத்துவம் வல்லார் தலைக்கோள் என எண்ணியிருக்கலாம். இஃது இவர்களுக்கு மாத்திரம் புதிதன்று. மேலைதேசத்தவரிடமும் இருந்த ஒரு கொள்கை.×

வடகலையைச் சேர்ந்த வைணவப் பற்றுடையார் பலர் இன்றும் இம்முறையில் எழுதி வருகின்றனர். கோபாலக் கிருஷ்ணமாச்சாரியருக்கென எழுதிய கினைவுமலருள் சில வியாசங்கள் இந்நடையைத் தழுவியே வந்துள. || இவ்வடகலையார் பேசுவதும் இம்மொழியே. ஆனல், தென்கலையைச் சார்ந்த வைணவர் தூய செந்தமிழ் எழுதவும் பேசவும் பழகிக் கொண்டனர். இதனுலும் வேறு காரணத்தாலும் இருகலையினரும் பெரும்பாலும் ஒத்து நடப்பதில்லை. அவர்களுக்குச் செவிக்கின்பம் மணிப்பிரவாளம்; இவர்களுக்குச் செவிக்கின்பம் செந்தமிழ்.

இனிச் சில மணிப்பிரவாள நூல்களை ஆராய்வாம்.

ஜயின நூல்கள்: இவற்றுள் பிரதானமானவை ஸ்ரீபுராணம், ஜீவசம்போதனை, மேருமந்தர புராணம், நீலகேசிஉரை, திருநூற்றந்தாதிஉரை, இரத்தினத்திரயம், பதார்த்தசாரம், அஷ்டபதார்த்தம், ஜயின ராமாயணம் முதலியன. இவற்றுட் பல ஏட்டுருபமாகவே இருக்கின்றன.

ஸ்ரீபுராணம், 24 தீர்த்தங்கரருடைய சரித்திரத்தைப் பற்றியும் கூறும். இவற்றுள் கடையவனைப் பற்றியே சீவகசிந்தாமணி கூறும். திருத்தக்கதேவர் தமது நூலின் உள்ளுறை பொருளை இப்புராணத்திலிருந்தே எடுத்தனரென்று தமிழ்ப் பெரியார் கூறுகின்றனர். இப்புராணமுமே முதனூலனறி வடமொழியிலுள்ள மகாபுராணத்தின் மொழி பெயர்ப்பாகும்.

இது கிபி 8 ஆம் நூற்றுண்டு வரையில் எழுதப்பட்டது. இதன் ஆசிரியன்மார் ஜனசேனர், குணபத்திரர் என்று இருவர். மு. இராகவ ஐயங்கார் அவர்கள் இந்நூல் 16-ம் நூற்றுண்டின தெனவும் மண்டல புருடர் என்பார் எழுதிய தென்றும் கூறுவர். ஆயினும் முன்னைய கால வரையறையே பெரும்பாலும் ஒத்துக் கொள்ளப்படுகிறது. இதன் 24-ம் காதை சிந்தாமணியுள் வந்துளது. சென்னைப் பல்கலைக் கழகத்தார் முழுமையும் அச்சிடுகின்றனர்.

இந்நூலுள்—கள், தல், அல், அம், ஐ ஆகும் என்று வரும் சொன் முடிபுகளும் என என்று என்னும் இடைச்சொற்களும்; அத்து, உக்கு, இக்கு என்னும் சாரியைகளுமே யன்றி, தனித் தமிழ்ச் சொறகளின் வழக்குமிக அருமையாகவே இருக்கின்றது. ஏனைய சொற்கள் சங்கதம், பிராகிருதம் முதலியவற்றிலிருந்து வந்தன. ஸ, ஸி, க்ஷ, ...., ஶ, ஷ, ஷி ...., ஜ, ஹ, ஊ, ஸ்ரீ முதலிய கிரந்த எழுத்துக்களும் காணகின்றன. அன்றியும், வேண்டிய இடங்களில் கிரந்தச் சுலோகங்களை மூற்கோளாகக் காட்டியுள்ளார்.

இவை பொருளை விளக்கவும் எளிதில் மனனம் செய்யவும் உதவியாயிருக்கும். இங்கே உபயோகித்த வினைமுடிபுகள் யாவும் தமிழ்ச்சொற்களே. 'யாங்ஙனம் செய்தும் மற்சொலலுதும். இஃது என்? இப்பெற்றியதோ?' என்று வருஞ் சொற்றொடர்கள் பழைய தொல்காப்பிய உரைமுறையைத்தழுவவும் இவ்வாசிரியர் எத்தனித்தமையைக்காட்டும். மேலும், ஊன்றி ஆராயின் ஏனைய ஜயின ஆசிரியரிலும் பார்க்க இவர்கள் தமிழ் இலக்கணம் கற்றுத்தேறி எழுதியுள்ளார் என்பது தோன்றும். 'இவர் சகிதாகி, தியானரூடாங்கி, இவள் ஆர்யை, இவள் யாவர்க்கு யோக்யை?' என்பனவற்றுலும் பிறவற்றுலும் அறிக.

இவருடைய வசனம் வருமாறு:- ப. 23. (Manuscript) 'இந்தமனு, ஆயுஷ்யாவஸானத்து ஸ்வர்ஷம் அடைந்தபின, மன்வந்தரம் அஸங்கியாத கோடிவர்ஷஞ் சென்றுகாலமும் முறையால் இழிந்துவாராநிற்ப, ஸ்ன்மதி என்பான் இரண்டாமனுத் தோன்றினுன். அயுஷயம் அமமமென்பது. ஸரீரோதஸேயீம், ஆயிரத்து† முந்நூறு வில்லளவு' இங்கே நிகழ்கால இடைநிலை அதிகம் வரும் இதனுட் காணும் தமிழ்ச்சொற்கள்—இந்த அடைந்தபின, சென்று முறை இழிந்து வாராநிற்ப, என்பான், இரண்டு, ஆயிரம, முந்நூறு, வில் என்பன மாத்திரமே. இவற்றின் நூற்று விகிதம் ஆக 40. இப்படியே வேறிடத்தும் ஆராய்ந்தால் வடமொழி கூடியும் தமிழ் அருகியும் இருப்பக் காண்போம். „பகவத் விஷய" மென்னும் வைணவர் உரைகளுள்ளும் இப்படியான வித்தியாசம் தோன்றும்.

அஷ்டபதார்த்தம்:—பழைய தத்துவ ஞானிகள் கொள்கைப்படி "வஸ்து" இப்புவியில் 9 பிரிவாக வகுக்கப்பட்டது. இவற்றுள் 8, ஜயின மதத்தினருக்கும் பொருத்தமானவை. அவையாவன:-பிரவிருத்தி, இலிங்கம், சரிதம், பலம், ஆப்தம், ஆகமம், பிரமாணம், நவபதார்த்தம் முதலியன. இவை இந்நூலுள் நன்கு விளக்கப்பட்டுள. அன்றியும், ஜயின மதத்தின் தத்துவஙகளும் இங்கு விளக்கம் பெற்றுள. மானவதரும சாத்திரத்துட்போல இங்கும் கால எல்லை வரையறுக்கப்பட்டுளது. கருமமும் அப்படியே. மணிப்பிரவாள நடையையும் ஜயின தத்துவத்தையும் அறியாவிட்டால் இந்நூல் எளிதில் விளங்காது.

இந்நூலுள் ஆசிரியர் ஒரே கருத்துடைய இரண்டு சொற்களை அடுக்காக இட்டுள்ளார். அவற்றுள் ஒன்று சங்கதம், ஒன்று தமிழ்.

உ ம்:—"கிரதக்ஞதைச் செய்ந்நன்றி, இப்படிப்பட்ட ஈதிருக்விஷயம் etc" முன்னையதுள் சங்கதம் முதலெழுத்து; பின்னையதுள் முதழ் எழுத்து! இதனுட்சில வசனம் வருமாறு:= " இப்பெற்றிப்பட்டலோகத்துள் ஏகேந்திரியமாகி ஸ்தாவரஜீவன்கள் அநந்தாநந்த பிரமாணத்தன, அவற்றுள் ஜகியாது ஜங்கம ஸரீரப்பிராப்தி ஸமுத்திர சலத்துள் வீழ்ந்த ரத்தமாம் சுலோசம் அதிதுர்லபமாகும். ஜங்கம ஜீவன்களுள் த்வீந்திரியமொழிய பஞ்சேந்திரியமாதல் விசிஷ்டகுணம்.... கிட்டுவதன்று"

இங்கே-பிரமாணத்தை த(புடையன), ஆகும், அன்று என்பன தமிழ்ச் சொற்கள், வினைமுற்றுக முடிந்துள. பிரமாணம் சரீரம், முதலியனப், ஸவில்—தொடங்கும். வேறிடங்களில் அப்படித் தொடங்கா. ஆதலின்—ஸ, ச, ந, ன; ப், ப; என்னும் மாற்று இலிபிகள் பிரமாணமின்றி வழக்கில வந்துள்ள என்றே முடிபு கூறல் வேண்டும். பழுத்த வைணவ ஆசிரியரும் ஜயினரும் கிரந்த எழுத்துக்களையே கையாண்டுளர். ஏனையோர் கலந்து கையாண்டுளர், எனவே, இலக்கண வரம்பொன்று இவற்றிற்கு நாம் கற்பித்தல் இயலாது. புனர்ச்சி விதியும் சிலவேளை சங்கத வியாகரண முறையிலும் மறுவேளை தமிழ் இலக்கண முறையிலும் வரும்.

* Professor Sankaran Nayar Ernakul College

† P 30

×"Expositor-is highly Scholastic—Eg. Bashful Verecund —howling—Ululation.

|| 1942 Edn.

†See தொல்-எழு 461, and நன் சூ 190.




சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற

சில்லாலை முத்துவைத்தியசாலை

சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை. பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.

(Q. 30. 11-5.43—10-8.43)

குறைந்த விலையில்

துணிகள்

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம், பங்காளர்.

Y 19. 4-3-42—3-3-44


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரத மான்மியம்

(ம. வே. தி. ச.)

(முற்றொடர்)

"அங்ஙனம் சோழராஜனைக் கொன்று விட்டு, பகைவரைத்தான் வென்றேனென்ற அகந்தையினால் பிரதோஷ விரதம் அநுட்டிப்பதையும் மறந்து அப் பிரதோஷ தினத்தன்று இரவு அறுசுவையுண்டி குறைவற வுண்டு களித்தான்; இப்படி விரதபங்கஞ் செய்தமையினாலே அவன் இமையயில் யுத்தபூமியில மடியநேர்ந்தது; உமையே! நீ வளர்க்கும் இரண்டாம் புதல்வனாகிய இவனும் அந்த அரசனுக்கு முந்திய பிறப்பிலும் புதல்வனாய்ப் பிறந்து பாவங்களைச் செய்தமையினால் இப்பொழுது தாய்தந்தையரை யிழந்து வறுமைப் பிணியினால் வருந்தலானான்; இவனுடைய நற்றாயாகிய சதி யென்பவள் முற்பிறப்பிலும் இவனுக்குத் தாயாகவும் அந்தப் பாண்டியனுக்குப் பட்டத்துத் தேவியாகவும் உள்ளவள்; அந்தப் பாண்டியனுடைய காமக்கிழத்தியரோடு இவள் மாறுபட்டு அப்பெண்களைப் பலவாறு துயரப்படுத்தி இறுதியில நஞ்சூட்டுவித்து அக்காமக் கிழத்தியரைச் சாகச் செய்தாள்; அந்த மகாபாபத்தின் பயனாலே இக்குழந்தையைப் பெற்ற அன்றே அவள் முதலை வாய்ப்பட்டு மாண்டாள். தாம் அநுஷ்டித்து வந்த பிரதோஷ விரதத்தை இடையிலே நிறுத்தி விடுத்துப் பலவகையான பாவங்களைச் செய்தமையினாற்றான் இவர்கள் பல துன்பங்களையும் அனுபவித்து வறுமையினால் வருந்தி அவமிருத்தடைந்தனர், இதுவே இவர்களுடைய பூர்வ வரலாறாகும்.

விரதங்களுட் சிறந்ததாகிய பிரதோஷ விரதத்தைப் பத்தி பூர்வமாக விதிப்படி அநுஷ்டிப்பவரெல்லோரும் வறுமைப்பிணி முதலிய சகல தீமைகளும் ஒழியப் பெற்றவராய், இம்மையிற் சகல செல்வங்களையும் இனிது நுகர்ந்து மறுமையிற் சிவகதி யடைவர். வெள்ளியங்கிரியின் உச்சியில் விளங்குகின்றதாகிய செம்பொற்றிருக் கோயிலினுள்ள நவரத்தினகசிதமான திருமணியிலே அரியணையில எழுந்தருளிய கருணையங் கடலாகிய கைலாசபதியானவர், விஷ்ணுமூர்த்தி குடமுழா என்னும வாத்தியத்தை ஒலிப்ப, தும்புரு நாரதர் வீணைவாசிப்ப, இந்திரன சதிகூட்ட, இலக்குமி மகர யாழ்தடவ, நாமகள காணுமிர்தமென இனனிசைபாட, பிரமதேவர் தம் கைகளால தாளம ஒற்ற, முப்பத்து முக்கோடி தேவரும் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களும் தரிசனஞ்செய்ய, உலக மாதாவாகிய உமாதேவியார் தமது கயன மற்சம போன்ற அருளோடு கூடிய திருக்கண்களால் உருக்கமுடன் தெவிட்டுதலின்றி நோக்க, இந்தப் பிரதோஷ புண்ணிய காலத்தில ஆனந்தத்தாண்டவஞ் செய்து ஆன்மகோடிகட்கெல்லாம் பூரண அநுக்கிரகஞ் செய்தருளுவர். ஆனதினாற்றான் பிரதோஷ காலம் விசேஷமுடைத் தென உண்மை நூலகள் எடுத்துக்கூறும்.

உமையே, இவை இங்ஙனமாக, நீ பெற்ற மூத்த பிள்ளையும் முற்பிறப்பிலே செல்வத்தோடு கூடிய ஒரு பிராமணனுக்குப் பிள்ளையாகப் பிறந்தான்; இவன் செல்வக்குடியிற் பிறந்தானாயினும் உலோபம் எனப்படுந் தீய குணத்தின்பாற் பட்டான்; எவர் எவ்வகையான பொருளைக் கொடுத்தாலும் இருகரமும் நீட்டி வாங்கினானேயொழிய, தான் இமியத்தனை பொருளேனும் ஏழைகட்குக் கொடுத்தறியான்; பிராமணனாய்ப் பிறந்தும் தன்னிடத்துள்ள பொருளைக்கொண்டு தீமைகளையே செய்து பாவத்தை யீட்டினான்; அதனாற்றான் இவனும் இப்பிறப்பில வறுமையினால் வருந்துகிறான். ஆனதால் உமையே, இப் பிள்ளைகளிருவரும் பிரதோஷ விரதத்தை விதிப்படி அறிந்து அநுட்டிப்பரேல் இவர்களையும் உன்னையும் பிடித்துள்ள வறுமைப்பிணி முதலிய துன்பங்களெல்லாம ஆதவனைக் கண்ட பனியென இன்னே விட்டு அகலும்; இறைவனுடைய பூரண அநுக்கிரகம் கைவரும்" என்று சாண்டில்லிய முனிவர் சொல்லுதலும், உமையென்னும் பார்ப்பனி அம்முனிவருடைய இதோபதேசங்களைக் கேட்டு உள்ளம் உருகியவளாய 'சுவாமீ, அப்படியே செய்கின்றேம்' என்று அம் முனிவரைப் பஞ்சாங்கமாக வீழ்ந்து வணங்க, அம்முனிவர் அவர்களுக்கு ஆசிகூறி அவ்விடம் விட்டகன்றார்.

(வரும்)

---

# அழகர் கிள்ளை விடு தூது

2ம் பக்கத் தொடர்ச்சி

னும் பெயர்பெற்ற மதுரையில் என்பது கருத்து) எழுந்தருளினன். அதுகாலை, சூரியனும் அஸ்தமித்தான். '-அம்பரத்தில்

கோடி கதிரோனுங் கோடி பனி
மதியும்
ஓடி நிரையா வுதித்தவென—நீடிய
பொற்குடையும் வெள்ளிக் குடை
யும் பொலிந்திலங்க
விற்கொடிகள் விண்ணோர் வெயர்
துடைப்ப'

தீவட்டிகள் பிரகாசிக்க, வாணக்காட்சி நடைபெற, பெருமாள் அனந்தாழ்வான்மீது பவனிவந்தான்.

"அவனி பரிக்கும் அனந்தாழ்வான்
மீது
பவனிவரக் கண்டு பணிந்தேன்-
அவனழகில்
பின்னழகு முன்னழகாம் பேரழ
கைக் காணுமுன்னே
முன்னழகைக் கண்டேன்நான்
மோகித்தேன்"

(பெருமாளுடைய முன்னழகைப் போல்வதாகிய பின்னழகைக் காணுமுன்னே என்பது கருத்து; முன்னிலும் பின் பழகியரென்று பெருமாளுக்கு ஒரு திருநாமம் உண்டு என்பதும் நினைவுகூரத்தக்கது)

அவனுடைய திருமுகம் முதலியவற்றைக் கண்டு மயக்கங்கொண்டு என்னுடன் வந்த மாதர்க்கு அவனைப்பற்றிக் கூறினேன். அவனைப் பார்த்து "அன்று நீர் திருடிய வெண்ணெயைப்போல உம்முடைய செங்கரத்தில் ஒரு சங்கிருக்கவும் என்கையிலுள்ள சங்கைக் (வளையலைக்) கவர்ந்துகொண்டீர்! திரௌபதியாகிய பெண்ணுக்கு நீரே ஆடையை உதவினீரே! இப்பொழுது என்னுடைய ஆடையைக் கவர்ந்தீரே! பழைய திருட்டுத் தொழிலை மீளவும் ஆரம்பித்துவிட்டீரோ?" என்றின்னனவாகிய வார்த்தைகளைக் கூறி முறையிட்டேன். பெருமாளும் சோலைமலையைச் சார்ந்தான். யானோ யானையுண்ட விளாங்கனிபோலானேன். வேதனை யீன்றவனாகிய (பிரமனைப் பெற்றவன், துன்பத்தைக் கொடுத்தவன்) அவனோ உள்ளிற் கனியானே (மனத்தில் இரங்கான்) சந்திரன், கடல், அயல்மாதர் கூற்று, மன்மதனுடைய செயல், காளைகளின்மணி, வேய்ங்குழல் ஆகிய இவை என்னைத் துன்புறுத்துகின்றன.

கிளியரசே! நான்உனக்கு வேண்டுவவெல்லாந் தருகிறேன். உன்னைப்போலத் தூதாகச் செல்வதற்குப் பிறபொருள்கள் சிறவா. அன்னத்தைத் தூதுவிடலாமென்றால், சூடுபட்ட (உச்சிக்கொண்டையுள்ள, சூடுண்ட) அது நான் சொல்பவற்றைத் துணிந்து சொல்லுமோ? குயிலை அனுப்பலாமென்றாலோ, அன்பாய் வளர்த்த தாயர்க்கு உதவாத (காக்கைக்கூட்டிலிருந்து வளர்ந்து இறகு முளைத்தபின் பறந்துபோய்விடுதல் குயிலின் இயல்பு) அது என்பால் அருள்வைத்துச் சொல்லுமோ? வண்டை அனுப்பலாமோ என்றால் அது வாய்குழறும். தென்றலை, அனுப்பலாமென்றாலோ, அது காலதிக்கோடு (காலன்-யமன்) தொடர்புடையது. அத்தகைய துன்பத்தைச் செய்பவரோடு தொடர்புடைய அது என்காதல் செப்புமோ? மேகத்தைத் தூதாகவிடலா மெனினோ மாதரையெல்லாந் தூற்றும் (பெண்களைத் தூற்றும் என்பது ஒரு பொருள்; பெரிய பூமி முழுவதும் மழைத்துளியைத் தூற்றுகின்ற என்பது மற்றப்பொருள்) அக்கொண்டல் தூதுவிடத்தக்கதோ? கொடுமையையுடையவர் என்னும் கருத்தமைந்த கொடியோரை (காக்கைகளை)த் தூதாக அனுப்பலாமோ? நீயே எனக்குத் தூதாகச் செல்லுந்தகுதியுடையை. பெருமாள் பள்ளியறைக்கு எழுந்தருளும் சமயம் பார்த்து என் தூதுச் செய்தியை உரைப்பாயாக. உன்னுடைய பெயர் சுவாகதமல்லவா? ஆதலால் உனக்கும் சுவாகதம் (நல்வரவு) உண்டாகும். என் தூதுச்செய்தியைக் கூறி, அவர் திருப்புயத்திலணிந்த மாலையைக் கேள். அதைத் தர மறுப்பாராயின், கோதையார் சூடிக்கொடுத்த மாலையையேனுந் தருக எனறு கேள். அப்பெருமான் இல்லையென்று சொல்லான். தருவான்.

"அருமாலை (மயக்கத்தை) நீக்கும்
அழகன் புயத்து
மருமாலை நீவாங்கி வா"

என்றிவ்வாறு தலைவி கிளியைத் தூதுவிடுஞ் சிறப்பு மிக இனியது. இன்னும் இந்நூலில் ஆங்காங்குப் பல இன்பம் பயக்குஞ் சொற்பிரயோகங்களைக் காணலாம். பக்திச் சுவையும் இன்பச்சுவையும் இத்தூதில் நிறைந்திருக்கின்றன. இதனைப் பாடிய கவிராயர் சைவனாக இருந்தும், சிவபிரான்மீது பக்தி நிரம்பிய பாடல்கள் பலவற்றை இயற்றிய ஒருவராக இருந்தும், விஷ்ணுவின் மீதும் இத்தகைய பத்தியோடு கூடிய பாடலைப் பாடியுள்ளமை அவர்தம் விரிந்த நோக்கைக் காட்டாநிற்கும். ஏனைய சிறப்புக்களையும் நயங்களையும் நூலில் ஆங்காங்கு படித்துக் கண்டு கொள்க. விரிக்கிற் பெருகும்.

---

# புதுக்குடியிருப்புக் கிராமச் சங்கத் தலைவர் பதவி

புதுக்குடியிருப்பு சி எம் எஸ் பாடசாலை உதவி உபாத்தியாயரும் மேற்படியூர் கந்தசாமி கோயில் மணியகாரரின் மருகருமான யோ. ச. பொன்னம்பலம் அவர்கள் அதிகப்படியான வாக்குகளால் இப்பகுதியின் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப் பெற்றார். இவரின் நியமனம் கிராம முன்னேற்றத்துக்கு நன்மை உண்டாக்குவதாகும்.

—நிருப.

---

# தப்பியோடிய சமசமாஜத் தலைவர்கள்

## இந்தியாவிற் கைதிகளாயினர்

பொலீஸார் ஒரு வருடகாலம் தேடித்திரிந்ததன்பின் இலங்கை சமசமாஜக்கட்சியைச் சேர்ந்த பிரபல நான்கு அங்கத்தினர்கள் இப்பொழுது இந்தியாவில கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களில் இருவர் அரசாங்கசபை அங்கத்தினராக இருந்திருக்கின்றனர். இக்கட்சியைச் சேர்ந்த மற்றும் பலர் கைதுசெய்யப்படவில்லை.

முன்னர் அரசாங்கசபையின் ருவான்வெலப் பிரதிநிதியாகவிருந்த டாக்டர் என். எம். பெரேரா அவிசாவெலைப் பிரதிநிதியாகவிருந்த மிஸ்றர். டி. பி. ஆர். குணவர்த்தன, மிஸ்டர் ஆர். வி. சேனநாயகா, மிஸ்றர். எஸ். பி. பிரிஸ் என்பவர்களே இப்பொழுது கைதுசெய்யப்பட்டிருப்பவர்களாவர்.

சென்ற வெள்ளிக்கிழமை பொலீஸ் இன்ஸ்பெக்றர் ஜெனரல் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையொன்று கூறுவதாவது:—

பாதுகாப்புக் கைதியாக்கும்படி 1942-ம ஆண்டு ஏப்ரல் மாதம உத்தரவிடப்பட்டு இதுவரை அகப்படாதிருந்த மிஸ்றர். ஆர். வி. சேனநாயகாவும் சட்டவிரோதமானதென்று அரசாங்கத்தால பிரகடனம் செய்யப்பட்ட ஓர் அரசியற் கட்சியைத் தொடர்ந்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்ததற்காகத் தேசாதிபதியின் உத்தரவின் பேரில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுப் பிறகு தப்பியோடியவரான

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

---

## நல்லூர்க் கந்தசுவாமி கோயில்

வருடாந்த மகோற்சவம் 1943

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்தத் திருவிழாக்கள் காரணமாக, 1943ம் ஆண்டு ஆகஸ்டுமாசம் 15-ந் திகதி தொடக்கம் 31ந் திகதி முடிய நிதமும் காலை 6 மணி தொடக்கம் 8 மணி வரையும் கோயில் வீதிகளாகிய யாழ்ப்பாணம் பருத்தித்துறைத் தெருப் பக்கம், பழைய சந்தைத் தெருப்பக்கம் என்னுமிவை மார்க்கமாகப் போகும் எவ்வகை வண்டிகளும் அப் பாதைகளை ஒழித்து, உவைமன் தெரு, நாவாந்துறைத் தெரு, நல்லூர் 1-ம் நம்பர்க் குறுக்குத்தெரு என்னும் இவைகள் மூலமாகவே போக்குவரவு செய்ய வேண்டுமென்று இதனல் எவர்க்கும் பிரசித்தஞ் செய்யப்படுகின்றது.

M. J. மானிங்,
வடமாகாண உதவிப் பொலிஸ் தலைவர்,
பொலிஸ்தானம்,
யாழ்ப்பாணம், 23.7.43.

(Mis. 90, 26 & 29-7.43)

---

## தமிழ்ச்சங்கச் சேவாசிரமம்

பருத்தித்துறை

ஷை ஆசிரமத்திற்கு 12—21க்கு மிடை வயதான தமிழ் மாணவர்கள் தெரியப்படுவர். தமிழ்; ஆங்கிலம், இன்னும் மற்றைய பள்ளிப்பாடங்கள், கைத்தொழிற்பயிற்சி, உணவு உடை எல்லாம் இலவசமாக அளிக்கப்படும். படிப்பு பொதுவாக 5 வருடத்தில் நிறைவாகும். அதுவரை ஆசிரமத்தில் சீவிக்கவேண்டும். அதன்பின் தொழில் கொடுக்கப்படும். முதற்றரமான மாணவர்கள் உயர்தரப் படிப்புக்காக இந்தியாவுக்கு அனுப்பப்படுவர். சேரவிரும்பும் மாணவர்கள் பெற்றாரின் சம்மதம் பெற்று 2 நற்சாட்சிப் பத்திரத்துடன் 1943ம் ஆ ஆவணிமீ 15ந் திகதிக்கு முன் எனக்கு மனுச்செய்யவேண்டும்.

மு. கார்த்திகேசு,
தமிழ்ச் சங்கத் தலைவர்,
பருத்தித்துறை.

(Mis. 91. 26 & 29.7.43)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்சங்கவெளியீடு

தமிழ்ப் பெருந்தகையீர்!

தமிழ்மொழி, நாகரிகம், தேசீய உணர்ச்சி முதலியன குன்றிப்போகாது இருக்கவைப்பதற்குப் பாதுகாப்பையும் வளர்ச்சியையும் அளிக்கத் தமிழ்ச் சங்கம் பருத்தித்துறையில் 1941ம் ஆண்டு பங்குனிமாதம் 11ந் திகதி அமைக்கப்பெற்றது. தமிழர்களும், தமிழ்ப்பற்று உள்ளவர்களும், எம்மதத்தினராய் இருப்பினும் இச்சங்கத்துடன் ஒத்துழைப்பார்களாக. இன்னும், இதன் உறுப்பினராய் இருந்து தமிழ்த்தொண்டு ஆற்றுமாறு ஒவ்வொருவரையும் அதிவிநயமுடன் வேண்டுகின்றேம்.

## அங்கதனம்

இச்சங்கத்தின் வருட அங்கதனம் 25 சதம். இதனை 18 வயதான எவரும் செல்லக்கட்டி அங்கத்துவ உரிமையை எளிதிற் பெறலாம். ஆதலின், இச்சிறு தொகையை இறுத்து நாட்டு நலத்திற்காக உழைக்கும் பெருந்தகையினராய் விளங்குவீர்களாக.

## கடமை

பெருமையுடையீர்! நும் நாட்டைச் சிறக்கவைக்கும் திறமையும் பொறுப்பும் உங்கள் இடமே உளது. அதன் நலத்திற்காக உழைக்க இன்றே முயற்சி செய்யுங்கள். இது நும் கடமைகளில் ஒன்று எனக் கருதுவீர்களாக.

மனிதன் ஒவ்வொருவனும் சில சில கடமைகள் ஆற்ற வேண்டியவனாய் இருக்கிறான். தன் தாய் தந்தையர், உறவினர், உடன்பிறந்தார், மனைவி மக்கள் முதலியோருக்குச் செய்யும் கடமை ஒன்று, தனக்குச் செய்யும் கடமை ஒன்று, தன் நாட்டிற்குச் செய்யும் கடமை ஒன்று. இவற்றில் ஒன்றிலாகுதல் தவறுதல் ஆகாது. பலர் தம் குடும்பத்தவர்கட்குச் செய்யவேண்டிய கடமைகளுடன் நின்றுகொண்டு, தம் நாட்டிற்கும் கடமைகள் புரியவேண்டும் என்பதை உணருகிறார்கள் இல்லை. சிலர் உணர்ந்தாலும் தங்கட்கு நேரம் இல்லை எனக் கூறுவர். இருபாலாரும் தவறு செய்கின்றனர். கடமை உணராது இருப்பவர்களைக் காட்டிலும் உணர்ந்தும் நேரம் இல்லையெனக் கூறுவோர் அதிக தவறு உடையோராவர். இவர்கள் மனைவி மக்களை மாத்திரம் கவனித்துக் கொண்டு தன்னைப்பெற்ற தாயைப் பராமரிக்க நேரம் இல்லை என்று சொல்லும் ஒருவருக்கு ஒப்பாவார்கள்.

ஒருவன் தன் நாட்டிற்குச் செய்யும் கடமை தன் குடும்பத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றுதான் என உணரவேண்டும். ஏனெனில், நாட்டுக்கு அவன் செய்யும் கடமையினால் நாடு சிறப்படைய அவனுடைய பின் சந்ததிகளும் சிறப்படைவார்கள். ஆதலின் நாட்டிற்குக் கடமை ஆற்றத் தவறுவானாகில் பின் சந்ததிகளுக்குத் துரோகம் செய்தவனாவான்.

## கலப்புமொழியும் பொருளாக்கமும்

ஓர் நாட்டின் வளர்ச்சிக்கு மொழியாக்கமும் பொருளாக்கமும் முக்கியமானவை. அந்நியமொழிச் சொற்கள் தமிழில் கலந்துகொள்ளாதவாறு தடுத்தல் வேண்டும். அந்நிய மொழிக்கலப்பால் நம் தமிழ்மொழி நாளடைவில் சிதைந்து வேறு மொழியாசத்திரியத் தமிழ் இலக்கியங்கள் வழங்காது போய்விடும். நாமும் தமிழர் எனத் திகழாது கலப்புச் சாதியினராகிவிடவுங் கூடும். இம்மாற்றம் எம் சந்ததிகளுக்குக் கேடு விளைக்கும். சாதித்தூய்மை இயக்கம் ஒன்று அவர்கள் மத்தியில் நடைபெறின் ஜெர்மனியில் யூதேயர்கள் பட்ட பாட்டை அடைவார்கள் அன்றோ. இன்னும், நம் நாட்டின் பொருளாதார நிலைமையைப் பெலப்படுத்த நாம் முயலாவிடின் அந்நியருக்கு நம் நாட்டை ஒப்படைத்த பாவிகளாவோம். ஆதலின், கைத்தொழிற்சாலைகள் பல நிறுவத் துணைபுரியுங்கள். இன்னும், மொழியாக்கம், பொருளாக்கம் முதலியவற்றை வேண்டி நிற்கும் இச்சங்கத்தையும் ஆதரித்து அதனுடைய ஆக்கமுயற்சிகளில் இடுபட்டுத் தமிழ்ச் சாகியத்தாரை உயர்த்திவையுங்கள்.

## சேவாசிரமம்

சங்க நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக எடுக்கப்பெற்ற வழிவகைகள் பலவுள. அவற்றில் "சேவாசிரமம்" என்னும் ஓர் ஸ்தாபனம் முக்கியமானது. இவ்வாசிரம நோக்கம், தாய்நாட்டிற்கு எவ்வாறு சேவை செய்வது என்பதைப் பயில்வதுவும் அதற்குச் சேவை செய்வதுமாகும். இதில் 12 வயதிற்கும் 24 வயதிற்கும் உட்பட்ட இளைஞர்கள் சேர்க்கப்பெறுவர். இவர்கட்குத் தாய்மொழி மூலமாகப் பழைய குரு சிஷ்ய முறையில் பலகலைகளும் கற்பிக்கப்படும். இரண்டாம் பாஷைகளாக ஆங்கிலம், சமஸ்கிருதம், சிங்களம், இந்தி முதலியன போதிக்கப்படும். பாடவகைகள் சங்கத்தினால் அமைக்கப்பெற்றனவாய் இருக்கும். மாணவர்களுக்குக் கைத்தொழிற் பயிற்சியும் அளிக்கப்படும். ஆசிரமப்படிப்புப் பொதுவாக 5 ஆண்டு அளவில் முற்றுப்பெறும். அதுவரை மாணவர்கள் ஆசிரமத்திலேயே விடுதியாக இருத்தல் வேண்டும். அவர்கட்குப் படிப்பு, உணவுடை, உறையுள் முதலியன இலவசமாக அளிக்கப்படும். முதற்றரமான மாணவர்கள் இந்தியாவில் இவ்வாசிரமச் செலவில் உயர்தரப் படிப்பு அல்லது குறித்த ஓர் தொழிற்பயிற்சி பெறுவர். இவ்வாசிரமம் மாணவர்களின் குணாதிசயங்களை நல்நிலைப்படுத்த ஏதுவாய் இருக்கும் என எண்ணப்படுகிறது.

பழந்தமிழ்க் குடிகளே! பெற்றோர்களே! உங்கள் குழந்தைகள் நம் தேயத்திற்குப்பிரயோசனமுள்ளவர்களாய் இருக்கவைப்பது உங்கள் கடமை. "நான் உற்றவயதடைந்து சுவாதீனம் பெறும்போது பிழைப்புக்கு என் செய்வேன்" என்னும் அச்சம் குடிகொள்ளாதவாறு இருக்கச்செய்ய நும் குழந்தைகளைச் சேவாசிரமத்திற்கு அனுப்புங்கள். ஆசிரமத்தை உங்கள் உதவியாலும், ஆதரவாலும் நன்னிலைப்படுத்துவீர்களாக.

இங்ஙனம்,
சே. கிருஷ்ணசிங்கம்,
(தமிழ்ச்சங்கக் காரியதரிசி.)

# உபசரணைக் கூட்டம்

## மருந்துச்சாலை அதிபருக்கு வாழ்த்து

நிகழும் சுபானு வருஷம் ஆடிமீ க-ந் தேதி (17-7-43) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில், காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் திருவாளர். K. ஆறுமுகம் J. P. வழககறிஞர் அவர்களின் தலைமையின் கீழ், காரைநகர் மருந்துச்சாலை அதிபர் திரு. M. சுப்பிரமணியம் அவர்களின் உபசரணைக் கூட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பல பேரறிஞர்கள் பேளவாத்தியத்துடன் அவரைச் சபைக்கு அழைத்துச் சென்றார்கள். ஆங்குப் பல, பேரறிஞரும் அவரும் குழுமியிருப்ப, புகைப்படம் பிடிக்கப்பட்டது. காரைநகர் வாசிகளால், அவரது நற்குண நற்செய்கைகளைப் பாராட்டிய ஒரு வரவேற்புப் பத்திரம், சபையில் வாசிக்கப்பட்டு அவருக்கு அளிக்கப்பட்டது.

அவர் நமது கிராமத்தில் முதன்முதலாக வந்து வைத்தியசாலை அதிபராயிருந்து, தன் கடமையைத் திறமையாக நடாத்தினர். திருவாளர்கள் S. பொன்னம்பலம் கிராமச் சங்கத் தலைவர், V. சுப்பிரமணியம் ஆசிரியர், A. V. அருளம்பலம் முதலிய பெரியோர்கள் மருந்துச்சாலை அதிபர்களின் நற்குண நற்செய்கைகளைப் பாராட்டிப் புகழ்ந்து பேசினார்கள். பின்பு, தேவாரபாயணத்துடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

—கடித.

# தப்பியோடிய சமசமாஜத் தலைவர்கள்

5-ம் பக்கத் தொடர்ச்சி

மிஸ்ரர். எஸ். பி. பீரிஸும் இந்தியாவிற் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். கண்டிப் பாதுகாப்புக் கைதிகள் சிறையிலிருந்து 1942ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 8ந் தேதி தப்பியோடியவர்களான டாக்டர் என். எம். பெரேரா மிஸ்றர். டி. பி. ஆர். குணவர்த்தன ஆகியோரும் இந்தியாவிற் கைதிகளாயினர்.

## தப்பியோடிய விபரம்

டாக்டர் பெரேராவும் மிஸ்ரர். குணவர்த்தனவும் டாக்டர் கல்வின் ஆர். டி. சில்வா (பாரிஸ்டர்) மிஸ்ரர் ஈ. சமரக்கொடி (வழக்கறிஞர்) ஆகியோருடன் 1940ம் ஆண்டு ஜூன் மாதம் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்ப் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். 1942ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8ந் தேதி அதாவது கொழும்பில் விமானத் தாக்குதல் நடைபெற்ற சில தினங்களின்பின், நான்கு பாதுகாப்புக் கைதிகளும் கண்டிச் சிறைச்சாலையின் காவற்காரர் ஒருவருடன் அங்கிருந்து தப்பியோடினர். அக்காவற்காரர் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏறக்குறைய 8 மாத காலத்திற்கு முன மிஸ்றர் சமரக்கொடி கொழும்புக்குச் சமீபத்தில் மீண்டும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார்.

டாக்டர் பெரேராவும் மிஸ்ரர் குணவர்த்தனவும் சிறையிலிருந்து தப்பியோடியது முதல் அரசாங்கசபைக் கூட்டங்களுக்கு அதிக காலம் வாராமையால் தங்கள் ஸ்தானங்களை இழந்தனர்.

கண்டியிலிருந்து தப்பியோடிய ஐவரில் இப்பொழுது கைது செய்யப்படாதிருப்பவர்கள் டாக்டர் டி. சில்வாவும் சிறைக் காவற்காரருமே.

## இன்னும் பலர் பிடிபடவில்லை

இதே கட்சியைச் சேர்ந்த மற்றும் பலர் இதுவரை பிடிபடாதிருந்து வருகின்றனர். இவர்களிற் சிலர் டாக்டர் பெறேராவின் மனைவி மிஸ்றர். டி. பி. ஆர். குணவர்த்தனவின் மனைவி மிஸஸ் விவியன் குணவர்த்தன ஆகியோராவர்.

குறித்த அங்கத்தினரில் இருவர் சென்னையிலும் மற்று மிருவர் பம்பாயிலும் கைது செய்யப்பட்டனர்.

டாக்டர். என். எம். பெறேரா ஆனந்தக் கல்லூரியின் பழைய மாணவராவர். லண்டன் சர்வகலாசாலையிற் கலவிப் பட்டங்களைப் பெற்ற இவர் இலங்கைச் சர்வகலாசாலையிற் போதனாசிரியராக விருந்தார். 1936 ம் ஆண்டு இவர் அரசாங்க சபையின் ருவான்விலைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

மிஸ்றர். குணவர்த்தன ஆனந்தக் கல்லூரியிலும் டிரினிட்டிக் கல்லூரியிலும் கல்வி கற்றபின், 10 வருட காலமாக அமெரிக்காவிற் கல்வி கற்று மீண்டும் இலங்கைக்குத் திரும்பினர். இவர் ஐரோப்பாவிற் சுற்றுப் பிரயாணஞ் செய்ததுண்டு. இவர் 1936 ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அரசாங்கசபையின் பழைய தலைவரான மிஸ்றர். எப். ஏ. ஒபயசேகராவைத் தோற்கடித்து ருவான்விலைப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,36700**
**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகச் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 26, July, 1943.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org